




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 03 | Issue: 16 | 4 Pages | 16.8.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 1 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 16 | 4 பக்கங்கள் | 16.8.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**

**வேண்டாமை வேண்ட வரும்**

**விளக்கம்:**

**ஒருவன் ஒன்றை விரும்புவதனால் பிறவாநிலைமையைவிரும்பவேண்டும், அது அவா அற்ற நிலையை விரும்பினால் உண்டாகும்.**

## உக்ரைன் போரை நிறுத்தும் டிரம்பின் உண்மையான முயற்சிக்கு பாராட்டு: புதின்



லண்டன், ஆக. 16

அமெரிக்க ஜனாதிபதியாக நடப்பு ஆண்டு ஜனவரியில் டிரம்ப் பொறுப்பேற்ற பின்னர், 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிற உக்ரைன் மற்றும் ரஷியா ஆகிய இரு நாடுகளிடையேயான போரை முடிவுக்கு கொண்டு வரும் மத்தியஸ்தம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார். இதற்காக புதினை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பல முறை பேசினார்.

இந்நிலையில், அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் ஆங்கரேஜ் நகரில் எல்மென்டார்ப் ரிச்சர்ட்சன் கூட்டு ராணுவ படை தளத்தில் நாளை (15ந்தேதி) அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் மற்றும் ரஷிய அதிபர் புதின் நேரில் சந்தித்து பேசுகின்றனர்.

இந்த சந்திப்பில் உக்ரைன் அமைதி ஒப்பந்தம் பற்றி இருவரும் ஆலோசனை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை டிரம்ப், அவருடைய ட்ரூத் சமூக வலைதள பக்கத்தில் உறுதிப்படுத்தினார். இதனை முன்னிட்டு வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் டிரம்ப் பேசும்போது, ரஷிய அதிபர் விளாடிமிர்புதினுடன்மேற்கொள்ளஉள்ளசந்திப்பின்முதல்2நிமிடங்களிலேயே ஒப்பந்தம் ஏற்படுமா? இல்லையா? என்பது எனக்கு சரியாக தெரிந்து விடும்.

எனினும், மிக மிக விரைவில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படும். அதனை உடனடியாக பார்க்க நான் விரும்புகிறேன் என டிரம்ப் கூறினார். 4 ஆண்டுகளில் முதன்முறையாக இரு தலைவர்களும் நேருக்கு நேராக சந்தித்து ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்த உள்ளனர். அதனால், நாளை நடைபெறவுள்ள போர்நிறுத்தம் பற்றிய பேச்சுவார்த்தை உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக பார்க்கப்படுகிறது.

முதல் கூட்டம் நன்றாக நடந்தால், உடனடியாக 2வது கூட்டம் ஒன்றை நாங்கள் நடத்துவோம். உடனடியாக அதனை நடத்தவே நான் விரும்புவேன் என டிரம்ப் கூறியுள்ளார். புதின் மற்றும் ஜெலன்ஸ்கி பங்கேற்கும் முத்தரப்பு கூட்டத்திற்கான சாத்தியம் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

டிரம்பு உடனான முக்கிய சந்திப்பை முன்னிட்டு, ரஷிய அரசின் உயரதிகாரிகளுடன் புதின் இன்று ஆலோசனை கூட்டம் ஒன்றை நடத்தினார். இதன்பின்னர் கிரெம்ளின் மாளிகையில் இருந்து வீடியோ ஒன்று வெளியிடப்பட்டது. அதில், டிரம்ப் அரசு நிர்வாகம் போரை நிறுத்துவதற்காக முழு அளவில் துடிப்பான மற்றும் உண்மையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதில் தொடர்புடைய அனைத்து தரப்பினரும் நலன் பெறுவதற்கான ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என அந்த வீடியோவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

நம்முடைய இருநாடுகளுக்கு இடையே, ஐரோப்பிய நாடுகள் மற்றும் உலகில் உள்ள அனைத்து நாடுகள் ஆகியவற்றின் அமைதிக்கான நீண்டகால நிபந்தனைகளை, அமெரிக்காவுடன் கூட, ஒரு ஒப்பந்தத்தின் கீழ் நாம் அடைய முடியும். அணு ஆயுத கட்டுப்பாடுக்கான விசயமும் இதில் அடங்கும் என புதின் குறிப்பிட்டு உள்ளார்.

## அவதூறு பரப்பியதாக குற்றச்சாட்டு: ஜோபைடன் மகனிடம் ரூ.8,700 கோடி நஷ்டஈடு கேட்கும் டிரம்ப் மனைவி



அமெரிக்காவை சேர்ந்த பிரபல நிதியாளர் ஜெப்ரி எப்ஸ்டீன் மீது பல பாலியல் குற்றச்சாட்டுகள் எழுந்தது. அவர் மீதான வழக்குகள் நிலுவையில் இருந்தபோது சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார். இதற்கிடையே அவர் மீதான விசாரணை ஆவணங்களில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உள்பட பிரபலங்கள் பெயர்கள் இருப்பதாக தகவல் வெளியானது. இந்த நிலையில் டிரம்புக்கு அவரது மனைவி மெலனியாவை எப்ஸ்டீன்தான் அறிமுகப்படுத்தினார் என்றும் அப்படித்தான் டிரம்பும், மெலனியாவும் சந்தித்தனர் என்று முன்னாள் ஜனாதிபதி ஜோபைடனின் மகன் ஹண்டர் பைடன் தெரிவித்தார். இதற்கு மெலனியா கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளார். ஹண்டர் பைடன் தெரிவித்த தகவல் தவறானது என்று தெரிவித்தார். மேலும் அவதூறு பரப்பியதாக கூறி ஹண்டர் பைடனுக்கு சட்டப்பூர்வ நோட்டீசை மெலனியா அனுப்பி உள்ளார். அதில் மெலனியா மற்றும் ஜெப்ரி எப்ஸ்டீன் இடையேயான தொடர்பைக் குறிக்கும் உங்கள் கருத்துக்கள் தவறானவை, அவதூறானவை. எனது நற்பெயருக்கு ஈடுசெய்ய முடியாத தீங்கு விளைவிக்கும் வகையில் உள்ளது. எனவே பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு அறிக்கைகளை திரும்பப் பெறத் தவறினால் உங்கள் மீது 1 பில்லியன் டாலர்(இந்திய மதிப்பில் ரூ.8700 கோடி) அவதூறு வழக்குத் தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'இறந்துபோன செல்லப்பிராணிகளிடம் பேச வேண்டுமா..?' சீனாவில் நூதன மோசடி

வீடுகளில் அன்பாக வளர்க்கப்படும் நாய், பூனை, பறவைகள், மீன்கள் உள்ளிட்ட செல்லப்பிராணிகள் பெரும்பாலும் குடும்பத்தின் ஒரு அங்கமாகவே மாறிவிடுகின்றன. அவ்வாறு வளர்க்கப்படும் செல்லப்பிராணிகள் திடீரென உயிரிழக்கும்போது, அதன் உரிமையாளர்கள் பெரும் துயரத்திற்கு ஆளாகிவிடுகின்றனர். அவ்வாறு துயரத்தில் வாடும் உரிமையாளர்களை குறிவைத்து பணம் பறிக்கும் கும்பல் ஒன்று சீனாவில் இயங்கி வருவதாக புகார்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக சீன ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. மோசடி கும்பலை சேர்ந்தவர்கள் சமூக வலைதளங்களில் இதற்காக பல்வேறு குழுக்களை நடத்தி வருவதாக கூறப்பட்டுகிறது. இதன்படி, செல்லப்பிராணிகளை இழந்து வாடும் உரிமையாளர்களை தொடர்பு கொண்டு பேசும் மோசடிக்காரர்கள், "இறந்துபோன செல்லப்பிராணிகளின் ஆன்மாவிடம் பேசி 5 கேள்விகள் கேட்க வேண்டுமா? அதற்கு 128 யுவான்(இந்திய மதிப்பில் சுமார் ரூ.1,500) செலவாகும்" என்று கூறுகின்றனர். இதே போல், இறந்துபோன செல்லப்பிராணிகளிடம் 6 மாதங்கள் வரை பேச வேண்டும் என்றால், அதற்கு 2,999 யுவான்(சுமார் ரூ.36,800), இறந்துபோன செல்லப்பிராணி மறுபிறவி எடுத்துள்ளதா? என்பதை கண்டறிய 1,899 யுவான்(சுமார் ரூ.22,800) வரை வசூல் செய்கின்றனர். தங்கள் செல்லப்பிராணிகளிடம் எப்படியாவது பேச வேண்டும் என்று ஏக்கத்தில் இருக்கும் உரிமையாளர்கள் பலர், இந்த மோசடி வலையில் சிக்கி பணத்தை இழந்துள்ளனர். இந்த மோசடிக்காரர்கள் பெரும்பாலும் சமூக வலைதளங்களில் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் வெளியிட்ட பதிவுகளை பார்த்துவிட்டு, அந்த தகவல்களை சேகரித்துக் கொள்கின்றனர். பின்னர் உரிமையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஏற்றவாறு பதில்களை தயாரித்து, செல்லப்பிராணிகள் பதிலளிப்பது போல் சித்தரிக்கின்றனர். இதனை மோசடி என்று உணர்ந்த சிலர், காவல்துறையினரிடம் இது குறித்து புகார் தெரிவித்துள்ளனர். இந்த விவகாரம் சீனாவின் சமூக வலைதளங்களில் தற்போது பேசுபொருளாகியுள்ளது.

# 'பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு' முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஆக 16

குற்றச்செயல்களுக்கு எதிரான விரைவான, கடுமையான நடவடிக்கை மற்றும் குறைந்து வரும் குற்ற விகிதங்கள் ஆகியவை காரணமாக தமிழ்நாடு பெண்களுக்குபாதுகாப்பானமாநிலமாகதிகழ்வதாகமுதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அமைச்சர் கீதாஜீவன் ஆங்கில நாளிதழில் எழுதியுள்ள கட்டுரையை முதல்அமைச்சர் தனது 'எக்ஸ்' பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது; "பெண்களுக்கான கல்வி மற்றும் தொழில் நிறுவனங்களில் பெண்களின் பங்களிப்பு ஆகியவற்றின் மூலம் தமிழ்நாடு எவ்வாறு பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக திகழ்கிறது என்பதை அமைச்சர் கீதாஜீவன் விளக்கமாக கூறியுள்ளார். குற்றச்செயல்களுக்கு எதிரான விரைவான, கடுமையான நடவடிக்கை மற்றும் குறைந்து வரும் குற்ற விகிதங்கள் ஆகியவை காரணமாக தமிழ்நாடு பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக உள்ளது. விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம் போன்ற நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த கட்டுரை இந்த சுதந்திர தினத்தில் படிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்." இவ்வாறு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## கன்னிவாடியில் கல்லூரி மாணவியிடம் சீண்டலில் ஈடுபட்ட அரசு பஸ் கண்டக்டர் மீது போக்சோ வழக்கு

தருமத்துப்பட்டி பகுதியை சேர்ந்த கல்லூரி மாணவியர் சிலர் திண்டுக்கல்லில் படித்து வருகின்றனர். கல்லூரி முடிந்து அரசு பேருந்தில் வீட்டுக்கு சென்ற போது கண்டக்டராக பணிபுரிந்த கீழதிப்பம்பட்டி காளிமுத்து(40) ஒரு மாணவிக்கு டிக்கெட் பின்புறம் அவரது அலைபேசி எண்ணை எழுதி கொடுத்தார். இதை மாணவி கண்டுகொள்ளாத நிலையில் அதே பஸ்சில் சம்பந்தப்பட்ட மாணவிக்கும், அவருடன் வந்த 2 மாணவியருக்கும் டிக்கெட் வழங்காமல் காளிமுத்து தாமதப்படுத்தினார். மேலும் கண்டக்டர் சீண்டலில் ஈடுபட்டதால் மாணவி பெற்றோருக்கு அலைபேசியில் தகவல் தெரிவித்தார். தருமத்துப்பட்டியில் பஸ்சை சிறை பிடித்த உறவினர்கள் கண்டக்டரை தாக்கியதில் காயமடைந்து அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மாணவியர்கள் புகாரில் கன்னிவாடி போலீசார் காளிமுத்து மீது போக்சோ வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் வேம்பி மதுரா பூரி குடிசையில் 79வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மா ஜெயசந்திரன் தலைமையில் கிராம சபை கூட்டம்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் வேம்பி மதுரா பூரி குடிசையில் 79வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மா ஜெயசந்திரன் தலைமையில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் பொதுமக்களுக்கு ஊராட்சியின் நலத் திட்டங்கள் வாசிக்கப்பட்டன இதனைத் தொடர்ந்து பொதுமக்களின் கோரிக்கையான மகளிர் கட்டிடம் பள்ளி சுற்று சுவர் மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டடம் எரிமேடை சுடுகாடு மின் மாற்றி பழுது பார்த்தல் விளையாட்டு உபகரணங்கள் புதிய குடியிருப்புக்கும் பழைய குடியிருப்பர்க்கும் சாலை இணைப்பு தெரு மின்விளக்கு வசதி இயற்கை உபாதை கழிவுகளை காவாயில் கலப்பதை தடுக்கவும் மருத்துவத் துறை சார்பாக காப்பீட்டு திட்டங்கள் காச நோயில்லா தமிழகம் விழிப்புணர்வு போன்ற கோரிக்கையை ஊராட்சி மன்ற தலைவர் தன



லட்சுமி முன்னிலையில் ஊராட்சி குழு தலைவர் ஏற்று துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க விளக்கம் கூறி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு நன்றி உரை கூறினார் உடன் விக்கிரவாண்டி வட்டார வளர்ச்சி அலுவலர் நாராயணன் சையத் முகமது ஆத்மா குழு தலைவர் வேம்பி J ரவி ஒன்றிய மேற்பார்வையாளர் செல்வநாயகி ஊராட்சி செயலாளர் வாசு மற்றும் கிராம அலுவலர் தூய்மை பணியாளர்கள் கிராம பொதுமக்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்

## இந்திய திருநாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டம்



மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் தலைமை கழகத்தில் கழகத்தின் நிறுவனர் & அஹிம்சைத்தலைவர் செ.இப்ராஹிம் பாதுஷா *Ibrahiem Bhathusha* அவர்கள் தலைமை தாங்கி மூவர்ண தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.. பெற்ற சுதந்திரத்தை பேணிக் காப்போம் கிடைத்த சுதந்திரத்தை மீட்டெடுப்போம் உள்ளிட்ட கருத்தையும் அன்றைக்கு வேலு நாச்சியார்தனி ஒரு பெண்ணாக போராடியது போல் இன்றைக்கு கழகத்தில் பல பெண் நிர்வாகிகளும் வீரமங்கைகளாக சட்ட விரோத கலெக்ஷன் டீம் குண்டர்களுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்துவதை வியந்து பாராட்டினார். வரக்கூடிய காலங்களில் இந்திய நாட்டின் சமத்துவத்திற்காகவும் சமூக நீதிக்காகவும் சகோதரத்துவத்திற்காகவும் அனைவரும் இணைந்து ஜனநாயக அறவழியில் கட்டமமைத்து நாட்டை காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் எடுப்போம் என்று சூளுரைத்தார்..கழகத்தின் மாநில நிர்வாகிகள் திருப்பூர் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் வடக்கு மாவட்டம் தெற்கு மாவட்டம் உள்ளிட்ட அனைத்து ஒன்றியம் பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கழகத்தின் மாநகர் மாவட்ட செயலாளர் செ. அபுதாஹிர் நன்றி உரை ஆற்றினார்.

S.அபுதாஹீர்.mjmk,கழக_செய்தி_ தொடர்பாளர் மாநகர்_மாவட்டகழக செயலாளர் மக்கள்_ஜனநாயகம்_முன்னேற்ற_கழகம் திருப்பூர்.

## சுதந்திர போராட்ட தியாகிகளின் ஓய்வூதியம் ரூ 22 ஆயிரமாக உயர்வு! முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை

சுதந்திர போராட்ட தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ 22 ஆயிரமாக உயர்த்தப்படும் என்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான ஓய்வூதியம் ரூ 12 ஆயிரமாக உயர்த்தப்படும் என்றும் சுதந்திர தின விழா உரையில் முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

79 ஆவது சுதந்திர தினம் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது. டெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்தார். அது போல் தமிழகத்தில் சென்னை ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல்வர் ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றினார்.

சுதந்திரதினத்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்த முதல்வர் ஸ்டாலின் தனது உரையில், தாயின் மணிக்கொடி பாரீர், அதை தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்... இதை தலை நிமிர்ந்து பாட தியாகம் செய்த தியாகிகளுக்கு வணக்கம் தெரிவித்து என் உரையை தொடங்குகிறேன்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் என் விடுதலை நாள் வாழ்த்துகள். விடுதலை வீரர்கள், அவரது குடும்பத்தினரை வணங்குகிறேன். விடுதலைக் காற்றை சுவாசிக்க காரணமாக விளங்கும் விடுதலை வீரர்களை போற்றுவோம். தேசிய கொடியை நான் மட்டுமல்ல, அனைத்து மாநில முதல்வர்களும் இந்தநாளில் ஏற்று தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் உரிமையை 1974 ஆம் ஆண்டு பெற்றுத் தந்தவர் முன்னாள் முதல்வர் கருணாநிதி.

இந்த முறை இந்த தேசியக் கொடியை ஏற்றி வைக்க வாய்ப்பு தந்த தமிழக மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அனைவருக்குமான நாடாக இந்தியா இருக்க வேண்டும் என தலைவர்கள் கனவு கண்டனர். தியாகிகளைத் தொடர்ந்து போற்றி வரும் அரசாக இந்த திராவிட மாடல் அரசு உள்ளது.

வஉசி மறைந்த நாள் தியாக திருநாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. கடலூரில் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட தியாகிகளுக்கு ரூ 20 ஆயிரம் ஓய்வூதியமாகவும் அவரது குடும்பத்தினருக்கு ரூ 10 ஆயிரம் ஓய்வூதியமாக வழங்கி வருகிறோம். தற்போது தியாகிகளுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ரூ 22 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. கட்டபொம்மன், வஉசி வழித் தோன்றல்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் ரூ 11 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். 2ஆம் உலகப் போரில் பங்கேற்ற தமிழக வீரர்களுக்கான நிதி யுதவி ரூ 15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. 2ஆம் உலகப் போரில் பங்கேற்ற வீரர்களின் கைம்பெண்களுக்கான குடும்ப ஓய்வூதியம் ரூ 8 ஆயிரமாக உயர்த்தப்படும்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியே 6.5சதவீதமாகத்தான் இருக்கிறது. ஆனால் தமிழகத்தின் வளர்ச்சி 11.19 சதவீதமாக உள்ளது. எங்களை நம்பி ஆட்சியை ஒப்படைத்த மக்களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி இது. தமிழகத்தில் 1.43 சதவீதம் மக்கள்தான் வறுமைக் கோட்டிற்கு கீழ் இருக்கிறார்கள்.

ஒற்றை துறை வளர்ச்சியாக இல்லாமல் பல்துறை வளர்ச்சியாக உள்ளது. அனைத்து மாவட்டங்களும் அனைத்து மக்களும், சமூகப்பிரிவும் வளர்வதை நீங்கள் பார்க்கிறீர்கள். இவ்வாறு அவர் தனது உரையில் தெரிவித்தார். இந்த உரையில் மொத்தம் 9 முக்கிய அறிவிப்புகளை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார்.

## சுண்டக்காம்பாளையம் அரசு நடுநிலைப்பள்ளியில் சுதந்திர தின விழா



சுண்டக்காம்பாளையம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு ஊத்துக்குளி வட்டார கல்வி அலுவலர் திரு ஜஸ்டின் அவர்கள் தலைமை ஏற்று நடத்தினார். பள்ளித்தலைமையாசிரியர் காளியப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்று தேசிய கொடியை ஏற்றி வைத்தார். விழாவில் சுண்டக்காம் பாளையம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு லோகநாதன், துணைக்கலைவர் தமிழ்ச்செல்வி, எஸ் எம் சி தலைவர் சித்ரா, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பழனிச்சாமி ,ஊர் கொத்துக்காரர் செல்வராஜ், மகாலிங்கம், மற்றும் பெற்றோர்கள் முன்னாள் மாணவர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் என திரளாக கலந்து கொண்டனர். நிகழ்வின்போது மாணவ மாணவியரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி, மாறுவேடப்போட்டி நடைபெற்றது. குன்னத்தூர் ரோட்டரி கிளிப் சார்பில் ஸ்கவுட் மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது. திரு பார்த்திபன், திரு குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் இனிப்பு வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது .ஆசிரியர் ரங்கநாதன் நன்றி கூறினார்.

## உஷார் மக்களே... கோவையில் இப்படியும் மோசடி




கோவையில், ஆன்லைனில் முதலீடு செய்தால் அதிக லாபம் தருவதாக கூறி இரண்டு நபர்களிடம் ரூ.40.5 லட்சம் மோசடி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கோவை சைபர் கிரைம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இதுபோன்ற மோசடிகளில் பாதிக்கப்பட்டால், 04222300600 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது https://cybercrime.gov.in/ என்ற இணையதளம் மூலமாகவோ புகார் அளிக்கலாம்.





# ரேணுகாசாமி கொலை வழக்கில் நடிகர் தர்ஷன் மீண்டும் சிறையில் அடைப்பு

பெங்களூரு, ஆக. 16

கன்னட நடிகர் தர்ஷன், சித்ரதுர்காவைச் சேர்ந்த ரசிகர் ரேணுகாசாமி என்பவரை கொலை செய்த வழக்கில், கடந்த 2024ம் ஆண்டு ஜூன் மாதம் கைது செய்யப்பட்டார். பின்னர், சிறையில் அடைக்கப்பட்ட அவருக்கு, கர்நாடக ஐகோர்ட்டு ஜாமின் வழங்கியது.

இதையடுத்து, தர்ஷன் சிறையில்இருந்துவெளியே வந்தார்.

இதையடுத்து, தர்ஷன் உள்பட 7 பேரின் ஜாமினை எதிர்த்து கர்நாடகா அரசு சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தது. இந்த வழக்கின் விசாரணை கடந்த மாதம் நிறைவு பெற்ற நிலையில், தீர்ப்பு வெளியிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நடிகர் தர்ஷனின் ஜாமின் மனுவை ரத்து செய்து சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து இன்று மாலை தர்ஷனை போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



# ரூ.2000 கோடி மதிப்பில் 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ஏலம்

சென்னை, ஆக. 16

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.2000 கோடி மதிப்பில் 10 ஆண்டுகால பிணையப்பத்திரங்கள் ரூ.1000 கோடி மற்றும் 10 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ரூ.1000 கோடி ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. இந்த ஏலம் இந்திய ரிசர்வ் வங்கியால், மும்பையில் உள்ள அதன் மும்பை கோட்டை அலுவலகத்தில் ஆகஸ்ட் 19, 2025 அன்று நடத்தப்படும். போட்டி ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்ளாகவும், போட்டியற்ற ஏலக் கேட்புகள் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்ளாகவும் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் [Reserve Bank of India Core Banking Solution (EKuber) System] மின்னணு படிவத்தில் (Electronic format) ஆகஸ்ட் 19, 2025 அன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தூத்துக்குடி: வீட்டின் பூட்டுகளை உடைத்து 21 சவரன் நகைகள் கொள்ளை

தூத்துக்குடி, ஆக. 16

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, சோமநந்தபுரம் தெருவைச் சேர்ந்த சுயம்பு மகன் கணேஷ் (வயது 39), உடன்குடி மெயின் பஜாரில் பர்னிச்சர் கடை நடத்தி வருகிறார்.

இவர் கடந்த ஒரு வாரங்களுக்கு முன்பு தனது குடும்பத்துடன் வெளியூர் சென்று விட்டார். நேற்று ஊர் திரும்பியுள்ளார். அப்போது அவரது வீட்டில் உள்ள கதவில் பூட்டுக்கள் உடைக்கப்பட்டு கிடந்தன.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பீரோவில் இருந்த 21 சவரன் தங்க நகைகள் திருடுபோயிருந்தது. இதன் மதிப்பு ரூ.10 லட்சம் என்று கூறப்படுகிறது. இந்த சம்பவம் குறித்து உடன்குடி காவல் நிலையத்தில் கணேஷ் கொடுத்த புகாரின் பேரில் இன்ஸ்பெக்டர் கண்ணன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். இந்த கொள்ளையில் ஈடுபட்ட மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




# சர்வதேச பட்டம் விடும் திருவிழா தொடக்கம்: அமைச்சர்கள் பங்கேற்பு

செங்கல்பட்டு, ஆக. 16



தமிழ்நாடு சுற்றுலாத்துறை மற்றும் மீடியா பாக்ஸ் நிறுவனம் இணைந்து நடத்தும் 4வது சர்வதேச காத்தாடி திருவிழா கோவளம் அடுத்த திருவிடந்தை கிழக்கு கடற்கரை சாலை பகுதியில் இன்று துவங்கியது. சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன், குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அன்பரசன் ஆகியோர் பங்கேற்று துவக்கி வைத்தனர்.

இதில் புலி, பூனை, மான், கரடி போன்ற வனவிலங்குகள், கார்ட்டூன் கதாபாத்திரங்கள், அலாவுதீன், ஜல்லிக்கட்டு காளை, கடல்வாழ் உயிரினங்கள்என, பல்வேறு வடிவ காத்தாடிகள், கண்கவர் வண்ணங்களில், கடற்கரை காற்றில், நீலவான பின்னணியில் வானில் பறந்து பார்வையாளர் அனைவரையும் கவர்ந்தது.

இந்தியா, தாய்லாந்து, சுவிட்சர்லாந்து, வியட்நாம், பிரான்ஸ், ஜெர்மனிஉள்ளிட்ட நாடுகளைசேர்ந்த, 40 காத்தாடி கலைஞர்கள், 100க்கும் மேற்பட்ட காத்தாடிகளை தற்போது பறக்க விட்டுள்ளனர். நுழைவு கட்டணம் ஆன்லைன் வழியில் வாங்கினால் ரூ.200, நேரில் வந்து வாங்கினால் ரூ.250 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 12வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கு இலவச அனுமதி. வளாகம் உள்ளே நடைபெறும் கலை நிகழ்ச்சிகளின் கட்டணம் தனியாக வசூலிக்கப்படுகிறது. சர்வதேச பட்டம் விடும் திருவிழா வரும் 17வரை நடைபெறுகிறது.

# அமைச்சரவை கூட்டத்தில் ரூ.1,937.76 கோடி மதிப்பிலான தொழில்துறை திட்டங்களுக்கு அனுமதி அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்



சென்னை, ஆக. 16

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முக்கியமான தொழில்துறைத் துறை முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக தொழில், முதலீட்டு ஊக்கவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது;

"முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மின்னணு உற்பத்தி, பொறியியல் வடிவமைப்பு, தொழில்நுட்ப ஜவுளி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, தகவல்தொழில்நுட்பம் மற்றும் பொதுத்துறை, உணவு மற்றும் வேளாண் தொழில்நுட்பம் போன்றதுறைகளில் 13,409 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மொத்தம் ரூ.1,937.76 கோடி முதலீட்டில் பல பெரிய தொழில்துறை திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

PayPal மற்றும் AmericanExpress ஆகிய இரண்டும் கடந்த ஆண்டு முதல்அமைச்சரின் அமெரிக்க பயணத்தின்போது எடுக்கப்பட்ட முயற்சிகளின் விளைவாகும். நான் எப்போதும் கூறுவது போல், நாங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதில்லை, முதலீடுகளை அடிப்படையாக வைத்து அவற்றை வேலைவாய்ப்புகளாக மாற்றுகிறோம். புதிய முதலீடுகள் மற்றும் பல முக்கிய திட்டங்களின் விரிவாக்கங்களுக்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தொடர் விடுமுறை: சொந்த ஊர்களுக்கு படையெடுத்த மக்கள்.. கிளாம்பாக்கத்தில் போக்குவரத்து நெரிசல்

சென்னை, ஆக. 16

சென்னையில் வசிக்கும் மக்கள் விடுமுறை தினத்தன்று தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வது வழக்கம். தொடர் விடுமுறை தினங்களையொட்டி, சென்னையில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு செல்வார்கள். நாளை சுதந்திர தினத்தையொட்டி விடுமுறை தினமாகும். அதன் பின்னர் வார விடுமுறை என தொடர் விடுமுறைவருவதால், சென்னையில்வசிக்கும் மக்கள்தங்களது சொந்த ஊர்களுக்கு படையெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், மக்கள் ஒரே நேரத்தில் சாலைகளை ஆக்கிரமித்துள்ளதால் சென்னையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. ஐயஞ்சேரி சிக்னல் முதல் வண்டலூர் பாலம் வரை சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவிற்கு வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. போக்குவரத்தை சீர் செய்யும் பணியில் 300 போலீசார் ஈடுபட்டு வருகின்றனர்.

விநாயகர் சதுர்த்தி விடுமுறையையொட்டி, சென்னையில் இருந்து தென் மாவட்டங்கள் மற்றும் பிற பகுதிகளுக்கு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# அரசுப் பள்ளிகள் மீது அவதூறு பரப்பும் கவர்னர் ஆர்.என். ரவி: அன்பில் மகேஷ் கண்டனம்



சென்னை, ஆக. 16

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளி கல்விச் சூழல் தொடர்ந்து சரிந்து வருகிறது என கவர்னர் ஆர்.என். ரவி தெரிவித்து இருந்தார் . இந்த நிலையில் கவர்னர் ஆர்.என். ரவிக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் கண்டனம் தெரிவித்துள்ளார் . இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் ,

ஆர்.எஸ்.எஸ். மனநிலையுடன் எப்போதும் அரசுப் பள்ளிகள் மீது அவதூறு பரப்பும் கவர்னர் அவர்களே...

ஏழை மாணவர்களின் படிப்பின் மீது அக்கறை உள்ளவர் போல, "நானும் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேன்" என்பதை காட்டிக்கொள்வதற்காக நான்கைந்து மாதங்களுக்கு ஒருமுறை பள்ளிக் கல்வித் துறையை நோக்கி இப்படி பேசுவது உங்களின் வாடிக்கையாகிவிட்டது. எங்கள் அரசுப் பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் நிகழ்த்திக் காட்டும் சாதனைகள் எண்ணிலடங்காதது. சாதனையாளர்களை மக்களும் திராவிட மாடல் அரசும் கொண்டாடி வருகிறது.

கமலாலயத்தின் ASER எனும் போலி அறிக்கையை உயர்த்திப்பிடிக்கும் நீங்கள், அரசுப் பள்ளிகளின் மீது அக்கறை இருந்தால் டெல்லியை நோக்கி "தமிழ்நாட்டிற்கு தர வேண்டிய கல்வி நிதி என்னவானது ?" என்று கேளுங்கள்.என தெரிவித்துள்ளார் .

# கவர்னர் ஆர்.என்.ரவிக்கு அமைச்சர் கே.என்.நேரு கண்டனம்



சென்னை,ஆக. 16

அமைச்சர் கே.என். நேரு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழ்நாட்டில் இளைஞர்கள் மத்தியில் ரசாயனப் போதைப்பொருள்களின் பயன்பாடும் அதிகரித்து வருகிறது. பெண்கள், பெண் குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமைகள் அதிகரிப்பது கவலை அளிக்கிறது'' எனக் கிண்டி கமலாலயத்தில் இருந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார் கவர்னர் ஆர்.என்.ரவி.

தென்னை மரத்தில் தேள் கொட்டியதற்குப் பனை மரத்தில் நெறிக் கட்டும் என்ற பழமொழியைப் போல 'தமிழ் மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் கவர்னர் எதுவும் செய்யவில்லை' எனச் சொல்லி நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கவர்னர் கையால் பட்டம் பெற மறுத்து அவமானத்தைச் சந்தித்த கவர்னர் ரவிக்கு 24 மணி நேரம் கழித்து நெறி கட்டியிருப்பதைத்தான் அவருடைய அறிக்கை வெளிக்காட்டுகிறது.

இன்னொரு பக்கம் சுதந்திர தினத்திற்காகத் தேநீர் விருந்துக்கு அரசியல் கட்சிகளுக்கு கவர்னர் ரவி அழைப்பு விடுத்ததை திமுக கூட்டணிக் கட்சிகள் புறக்கணித்திருக்கின்றன. இப்படி விரக்தியில் அறிக்கை விட்டிருக்கிறார் கவர்னர் . அதில் சொல்லப்பட்ட பல குற்றச்சாட்டுகளுக்கு ஏற்கெனவே ஆதாரத்தோடு பதில் அளிக்கப்பட்டுவிட்டது.

நாட்டின் சுதந்திர தினத்திற்கு விடுத்துள்ள செய்தியில் கூட நாகரிகம் இல்லாமல் ஆதாரமில்லாமல், மனம் போன போக்கில் அவதூறுகளை அள்ளி வீசியிருக்கிறார். ஆர். என்.ரவி ஜனநாயக முறையில் மக்களின் பெருவாரியான ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வருகிறார். அத்தனை நெருக்கடிகளையும் உச்ச நீதிமன்றம் வரை சென்று நாம் நசுக்கினோம்.

அமைச்சர்கள் நியமனம், மசோதாக்கள் நிறுத்தி வைப்பு, கவர்னர் உரையில் ஆரியத் திணிப்பு என எதிலாவது கவர்னர் ரவி வெற்றி பெற்றிருக்கிறாரா? அவமானங்களை மட்டுமல்ல, தொடர் தோல்விகளையும் தாங்கிக் கொள்வது அரிய கலை.

கவர்னரின் அறிக்கையில் 'பாஜகவுக்கு வாக்களியுங்கள்' என்ற ஒற்றை வார்த்தை மட்டும்தான் இல்லை. மற்றபடி ஆதாரங்கள் இல்லாமல் அவதூறுகளை வீசும் அசிங்கமான அரசியல்தான் செய்திருக்கிறார்.

ஒன்றிய அரசு லட்சக்கணக்கான கோடிகளை தமிழ்நாட்டுக்கு நிதிப் பகிர்வு வழங்கியது எனச் சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு மோடி அரசு சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையில் 'தமிழ்நாடு' என்ற பெயரே இல்லை என்பது கூட தெரியாமலா ஓர் கவர்னர் இருப்பார்? இந்த போட்டோஷாப் வேலைகள் எல்லாம் தமிழ்நாட்டில் எடுபடாது என்று தெரிந்தும் அறிக்கை வெளியிட்டுத் திருப்திப்பட்டுக் கொள்வது எல்லாம் ஆகச் சிறந்த நகைச்சுவை.கவர்னரின் அறிக்கையைப் படித்தால் அமித் ஷாவே சிரிப்பார்.

தமிழ்நாடு பற்றிய தேசியப் புள்ளி விவரங்கள் கல்வியிலும், சமூகபாலின வேறுபாடுகளைக் களையும் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும், ஆற்றல்மிக்க இளையோரை உருவாக்குவதிலும் முன்னோடியாகத் திகழ்ந்து, நாட்டின் பொருளாதாரத்தில் தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகின்றது. அண்மையில் ஒன்றிய அரசு புள்ளியியல் அமைச்சகம் வெளியிட்ட விவரங்களின்படியே பத்தாண்டுக்குப் பிறகு, தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சி விகிதம் 11.19 சதவிகிதமாக இரட்டை இலக்க வளர்ச்சிய எட்டியுள்ளது.

இந்நிலையில்தான் கவர்னர் பொய்களையும் அவதூறுகளையும் வரி இறைத்திருக்கிறார். கவர்னரின் பேச்சுக்குப் பதில் கூறும் முகமாக ஆதாரங்களை முன்வைத்துப் பதிலளிப்பது, பயனற்றது. ஏனென்றால், கவர்னர் ஆர்.என். ரவி தமிழ்நாட்டின் கவர்னராகச் செயல்படாமல், திராவிட மாடல் மீது வெளிப்படையாக வெறுப்பைக் கக்கும் நாக்பூரின் ஏஜெண்டாகச் செயல்பட்டு வருகின்றார்.

நாட்டிலேயே தனிநபர் வருமானத்தில் முதலிடத்தில் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக இருப்பதும் தமிழ்நாடுதான். இந்தியாவிலேயே அதிகப் பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கியதும் அதிக ஸ்டார்ட் அப் எண்ணிக்கைகளும் உருவாக்கியது தமிழ்நாடுதான்.

கடந்தாண்டு புயல் வெள்ளப் பாதிப்புகளுக்காக தமிழ்நாடு அரசு 37,907 கோடி ரூபாய் கேட்டபோது வெறும்276கோடி ரூபாயை மட்டுமே வழங்கி வஞ்சித்தது ஒன்றிய அரசு. பள்ளிக் கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய நிதியையும் இன்னும் வழங்காமல் இழுத்தடித்து வருகிறது. மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் நிதி என்று ஒன்றிய கல்வி அமைச்சர் அறிவித்தது ஜனநாயகப் படுகொலை இல்லையா?

கமலாலயத்திற்குப் போட்டியாக ராஜ்பவனை மாற்ற முயல்கிறார். கவர்னர் அந்தந்த மாநில அரசுகளுக்கு நண்பராக இருக்க வேண்டியவர். ஆனால், எதிரிக் கட்சியாக நின்று, வசைமாரி பொழிந்து கொண்டிருக்கிறார். என தெரிவித்துள்ளார் .

# புத்தகத் திருவிழாவில் புகைப்படப் போட்டி: தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி ஆக. 16

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்ட புத்தகத் திருவிழா செயலாக்க குழு மற்றும் தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்துடன் இணைந்து தூத்துக்குடி மாவட்டத்தில் "6வது புத்தகத் திருவிழா 2025" தூத்துக்குடி தருவை மைதானத்தில் வைத்து 22.8.2025 முதல் 31.8.2025 வரை 10 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்தபுத்தகதிருவிழாவில் தூத்துக்குடி மாவட்ட புகைப்பட கலைஞர்கள் மற்றும் பொதுமக்களுக்கான புகைப்பட போட்டி நடத்தப்பட உள்ளது. புகைப்பட கண்காட்சிக்காக தருவை மைதானத்தில் தனி அரங்கு அமைக்கப்பட உள்ளது.

இந்த புத்தகத் திருவிழாவில் தூத்துக்குடியின் கலாச்சாரம், பாரம்பரியம், தெரு வாழ்க்கை, மதத்திருவிழாக்கள், நினைவுச் சின்னங்கள், மக்கள் வாழ்க்கை முறை, மீனவ சமூகத்தின் வாழ்க்கை, தூத்துக்குடி இயற்கை காட்சிகள் (கடற்பரப்புக்கள் நதிக்காட்சிகள், ஈர நிலங்கள், நகர்புற காட்சிகள்) வனவிலங்குகள் மற்றும் ஈரநிலை பறவைகள், தொழிலாளர்கள் (தொழில் துறை, மீன்பிடித்தல்) விளையாட்டு போன்ற புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்த புகைப்படங்கள் கீழ்க்காணும் விதிமுறைகளைப் பின்பற்றி பொதுமக்கள் விண்ணப்பிக்கலாம்.

புகைப்படங்கள் தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த படங்களாக மட்டுமே இருக்க வேண்டும். இந்தியாவிலிருந்து எந்த வயதினரும் விண்ணப்பிக்கலாம். ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சம் 5 படங்களை சமர்ப்பிக்கலாம். விண்ணப்பதாரர் தனது சொந்த படங்களை மட்டுமே அனுப்ப வேண்டும். கிராபிக்ஸ் மற்றும் AI (Artificial Inteligence) உருவாக்கிய படங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. மேலும் புகைப்படங்கள் ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த படங்கள் 100 dpi (dots per inch) இல் நீண்ட பக்கத்தில் 3,000 பிக்சல்கள் (pixel) கொண்ட RGB (Red Green Blue) கோப்புகளில் இருக்க வேண்டும்.

அந்த புகைப்படங்களை கருப்பு வெள்ளை புகைப்படங்களாக அனுப்பலாம். ஒவ்வொரு புகைப்படமும் புகைப்படத்திற்கான தலைப்புடன் இருக்க வேண்டும். ஒவ்வொரு புகைப்படமும் குறைந்தபட்சம் 5 MB க்கு குறைவாக இருத்தல் வேண்டும். புகைப்பட கண்காட்சியில் வெற்றி பெற்ற போட்டியாளர்கள் முழுதெளிவுத் திறன்கொண்ட RAW / TIFF படங்களை அச்சிடுவதற்கும் / உண்மை தன்மையினை அறிவதற்கும் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுவார்கள். அந்த புகைப்படங்களில் பார்டர்கள் / வாட்டர் மார்க்ஸ் அல்லது எந்தவித அடையாளமும் இருத்தல் கூடாது.

விண்ணப்ப பட்டியலில் இடம்பெற்ற புகைப்படங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படங்கள் கண்காட்சி, சமூக ஊடகங்கள், இணையதளம் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளிவர பயன்படுத்தப்படும். புகைப்பட கண்காட்சியின் நடுவர்களின் முடிவே இறுதியானது. மேலும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைவரும் நிர்வாகம் எடுக்கும் அனைத்து வகையான முடிவுக்கும் கட்டுப்பட்டவர்கள் ஆவார்கள்.

இந்த புகைப்படப் போட்டியானது இரண்டு பிரிவுகளின் கீழ் நடத்தப்படும். இந்த புகைப்படப் போட்டியில் கலந்து கொள்ள 18 வயது வரையிலான நபர்கள் ஒரு பிரிவாகவும், 18 வயதிற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு பிரிவாகவும் என இரண்டு பிரிவுகளின் கீழ் போட்டியில் கலந்து கொள்ளலாம். மேலும்புகைப்படப்போட்டிக்காக அனுப்பப்படும் புகைப்படங்கள் அனைத்தும் தகுதி வாய்ந்த தேர்வு குழுவினரால் கூராய்வு செய்யப்பட்டு முதல், இரண்டாம் மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

இந்த போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் மிகச்சிறந்த புகைப்படத்திற்கு முதல் பரிசாக ரூ.1 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.50 ஆயிரமும், 10 புகைப்படங்களுக்கு ஆறுதல் பரிசாக தலா ரூ.5 ஆயிரமும் வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு பிரிவிலும் மிகச்சிறந்ததாக தெரிவு செய்யப்படும் புகைப்படம் புத்தகக் கண்காட்சி நடைபெறும் அனைத்து நாட்களிலும் பொதுமக்களின் காட்சிக்காக வைக்கப்படும்.

எனவே புகைப்படக்கலைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் தங்களது படைப்புகளை 14.8.2025 முதல் 21.8.2025ம் தேதி வரை அனுப்பி வைக்கலாம். புகைப்படப் போட்டிக்காக அனுப்பப்படும் புகைப்படங்களை மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வமான இணையதளமான https://thoothukudi.nic.in/ இல் வெளியிடப்படும் இணைப்பில் (LINK) பதிவேற்றம் செய்யலாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆசிரியர் தகுதித் தேர்வு தேதி மாற்றம் அறிவிப்பு வெளியீடு

சென்னை, ஆக. 16

ஆசிரியர் தகுதித் தேர்வுக்கான தேதிகள் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது; "ஆசிரியர் தேர்வு வாரியம் இந்த ஆண்டு(2025) தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (தாள்1 மற்றும் தாள் II) நடத்துவதற்கு உத்தேசித்து அறிவிக்கையை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில்(Website: http://www.trb.tn.gov.in) 11.08.2025 அன்று வெளியிட்டது. மேற்படி தேர்வுகள் 01.11.2025 மற்றும் 02.11.2025 ஆகிய தேதிகளில் நடைபெறும் என அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. தற்போது நிர்வாக காரணங்களினால் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வுகள் 15.11.2025 அன்று தாள் Iம் மற்றும் 16.11.2025 அன்று தாள் IIம் நடைபெறும் எனத் திருத்திய அறிவிப்பு வெளியிடப்படுகிறது." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# நெல்லையில் சுதந்திர தின பாதுகாப்பு பணியில் 850 போலீஸ்


திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவின் படி, சுதந்திர தினத்தை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்த பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களான முக்கிய பஜார்கள், பேருந்து நிலையங்கள், ரெயில் நிலையங்கள், வழிபாட்டு தலங்கள், கடைவீதிகள் என அனைத்து இடங்களிலும் எவ்வித அசம்பாவிதமும் நடந்திடா வண்ணம் 850க்கும் மேற்பட்ட காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும் வெடிகுண்டு தடுப்பு சிறப்பு பிரிவினர் மாவட்டம் முழுவதும் முக்கிய இடங்களில் தீவிரமாக சோதனை செய்து வருகின்றனர். இது தவிர திருநெல்வேலிமாவட்டத்தில்அனைத்துதங்கும்விடுதிகளிலும் போலீசார் இரவு, பகலாக சோதனைகள் மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபர்களின் நடமாட்டம் குறித்து ஏதேனும் தகவல் இருந்தால் காவல் துறைக்கு தெரிவிக்கும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்டம் முழுவதும் சுற்றுக்காவல் ரோந்து வாகனங்கள் மூலம் ரோந்து பணிகள் தீவிரப்படுத்தப்பட்டும், முக்கியமான இடங்களில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வாகன சோதனைகளும், தணிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

# ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலித்தால் அபராதம்: போக்குவரத்து துறை எச்சரிக்கை

சென்னை, ஆக. 16

ஆம்னி பஸ்களில் அதிக கட்டணம் வசூலித்தால் அபராதம் விதிக்கப்படும் என போக்குவரத்து துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது;

"நாளை சுதந்திர தினம் 15.08.2025 மற்றும் அரசு வார விடுமுறையைத் தொடர்ந்து பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்துகள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்தால் அதனைத் தடுக்க தமிழ்நாடு முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனை சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்புக் குழு அமைக்கப்பட்டு அதிகப்படியான கட்டணம் வசூல் செய்து மற்றும் அனுமதிக்குப் புறம்பாக இயக்கும் ஆம்னி பேருந்துகளை தீவிரமாக சோதனை செய்து அபராதம் விதித்தும், வாகனங்களை சிறைபிடித்தும் வரி வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."



இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கன்னியாகுமரி: வீட்டு மாடியில் கஞ்சா செடி வளர்த்த வாலிபர் கைது

கன்னியாகுமரி ஆக. 16

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் இந்துசூடன் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் மாலையில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த பகுதியில் நின்று கொண்டிருந்த ஒரு வாலிபர் போலீசாரை கண்டதும் ஓட்டம் பிடித்தார். இதனால் சந்தேகம் அடைந்த போலீசார் அவரை சுற்றி வளைத்து பிடித்தனர். பிறகு சோதனையிட்டதில் அவரிடம் 50 கிராம் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



இதனை தொடர்ந்து நடத்தியவிசாரணையில், அவர் மார்த்தாண்டம் அருகே செட்டிச்சார்விளையை சேர்ந்த ரவீந்திரன் மகன் சுபாஷ் கிருஷ்ணன் (வயது 27) என்பதும், பெயிண்டராக வேலை செய்து வருவதும் தெரியவந்தது. மேலும் இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்து அவரை போலீசார் கைது செய்தனர்.

பின்னர்சுபாஷ்கிருஷ்ணன் வீட்டிலும் போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். அங்கு மாடியில் அவர் ஏராளமான செடிகளை வளர்த்து வந்துள்ளார். அதில் ஒரு பூந்தொட்டியில் கஞ்சா செடி வைத்திருந்ததை போலீசார் கண்டுபிடித்தனர். இதனை தொடர்ந்து கஞ்சா செடியை பறிமுதல் செய்தனர்.

# தூய்மைப் பணியாளர்களை கைது செய்துள்ள தி.மு.க. அரசுக்கு கடும் கண்டனம்: ஓ.பன்னீர் செல்வம்

சென்னை , ஆக. 16

முன்னாள் முதல்அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தேர்தலுக்கு முன்பு தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் தூய்மைப் பணியாளர்களின் பணி ஊதியும், ஓய்வூதியம்போன்றகோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்படும் என்று தி.மு.க வாக்குறுதி அளித்திருந்தது. இது தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை எண் 285ல் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

திமுகவின் ஆட்சியே முடிவடையும் தருவாயில் உள்ள நிலையில், தூய்மைப் பணியாளர்களின் நியாயமான கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று எனது அறிக்கை வாயிலாக கேட்டுக் கொண்டிருந்தேன். இதைத் தான் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் வலியுறுத்தினர். தூய்மைப் பணியாளர்களும் சென்னை மாநகராட்சி அலுவலகம் அமைந்துள்ள ரிப்பன் மாளிகையில் அறவழியில் தங்களது போராட்டத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில், தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முன்வராத தி.மு.க அரசு நள்ளிரவில் ஆயிரக்கணக்கான தூய்மைப் பணியாளர்களை கைது செய்துள்ளது. இதில் பல பெண் தூய்மைப் பணியாளர்கள் மயக்கமடைத்துள்ளனர்.

திமுக ஆட்சியே இன்னும் சில மாதங்களில் முடிவடையவுள்ள நிலையில், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாதது கடும் கண்டனத்திற்குரியது. இந்த இலட்சணத்தில் 93 விழுக்காடு வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுவிட்டதாக திமுக அரசு விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறது. மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி இடைநிலை ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி. பகுதி நேர ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி, தூய்மைப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி என அனைத்து வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. வாக்குறுதி அளித்ததற்கான ஆதாரம் இருந்தும் வாக்குறுதி அளிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார். முதல்அமைச்சர் மவுனம் சாதிக்கிறார்.

தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மைப் பணியாளர்களை முதல்அமைச்சர் அழைத்து பேச்சவார்த்தை நடத்தி, அவர்களுடைய பணி நிரந்தாக் கோரிக்கையினை உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இல்லையெனில், அவர்கள் வடிக்கும் கண்ணீர் இந்த ஆட்சியை நிச்சயம் அழித்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.என தெரிவித்துள்ளார் .

# லாட்ஜ்க்கு அழைத்த காதலன்... ஆசையாய் சென்ற இளம்பெண்ணிற்கு நேர்ந்த விபரீதம்




திருப்பதி, ஆக. 16

தெலுங்கானா மாநிலம் ஜனகாம அடுத்த ஜங்கான் பகுதியை சேர்ந்தவர் 18 வயது இளம்பெண். அதே பகுதியை சேர்ந்தவர் முகமது ஒவைசி (வயது 23) . இருவரும் காதலித்து வந்தது. இந்தநிலையில் முகமது ஒவைசி தனது காதலியை நண்பர்களுக்கு விருந்தாக்க முடிவு செய்தார். கடந்த மாதம் இளம்பெண்ணுக்கு முகமது போன் செய்து உன்னுடன் தனியாக பேச வேண்டும் என வரவழைத்தார். இதனைஉண்மைஎனநம்பி பின்னர் நடக்கபோவதை அறியாமல் ஆசையாய் சென்ற இளம்பெண் காதலனை தேடிச்சென்றார்.

முகமது ஒவைசி கார் ஒன்றை ஏற்பாடு செய்து அதில் தனது நண்பர்களான பவன்குமார், சிவக்குமார், அப்துல் கியூம், பூஜா சமந்த் ரெட்டி, சாய் சரண் ரெட்டி, சாய்ராம், நுகலா ரவி, ஜெட்டி சஞ்சய் ஆகியோருடன் தயாராக இருந்தார். அங்கு வந்த காதலியை காரில் ஏற்றிக்கொண்டு ஜன்கனில் உள்ள லாட்ஜ்க்கு அழைத்து சென்றனர். இளம்பெண்ணை மிரட்டை ஒருவர் பின் ஒருவராக அடுத்தடுத்து பாலியல் பலாத்காரம் செய்தனர். இதனை வெளியில் யாரிடமும் கூறக்கூடாது என மிரட்டி அனுப்பி வைத்தனர். இதனால் நடந்த சம்பவத்தை இளம்பெண் யாரிடமும் தெரிவிக்கவில்லை. சம்பவம் நடந்த சில நாட்களுக்கு பின்னர் கூட்டு பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட வாலிபர் ஒருவர் இளம்பெண்ணிடம் வந்து காதலிப்பதாக தெரிவித்தார். அவரும் இளம்பெண்ணை கோவாவுக்கு அழைத்து சென்று அறை எடுத்து இளம்பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தார். பின்னர் இளம்பெண்ணை அவரது சொந்த ஊரில் விட்டு தப்பி சென்றார்.

இளம்பெண் இது குறித்து தனது சகோதரியிடம் தெரிவித்தார். இளம்பெண்ணின் சகோதரி போலீசில் புகார் செய்தார். போலீசார்வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் இளம்பெண் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தது உறுதியானது. இதனையடுத்து போலீசார் கூட்டு பாலியல் பலாத்காரத்தில் ஈடுபட்ட 10 வாலிபர்களையும் கைது செய்து ஜெயிலில் அடைத்தனர்.

# தமிழகத்தில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன கவர்னர் ஆர்.என்.ரவி குற்றச்சாட்டு



சென்னை, ஆக. 16

சுதந்திர தினத்தை முன்னிட்டு கவர்னர் ஆர்.என். ரவி பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களை தேநீர் விருந்துக்கு அழைத்திருந்தார். ஆனால் அவரது அழைப்பை தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் புறக்கணிப்பதாக தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழக கவர்னர் ஆர்.என்.ரவிதனது சுதந்திர தின வாழ்த்து குறிப்பில் தமிழக அரசு மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார். தமிழகத்தில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

மேலும், இது தொடர்பாக அவர் கூறியிருப்பதாவது;

"தமிழ் மொழியும், கலாசார மரபும் நமது தேசத்தின் பெருமைகள். தமிழ் மொழி, தமிழ் கலாசாரம், தமிழ் மரபின் மிகப்பெரிய அபிமானி நமது பிரதமர் நரேந்திர மோடி.

தமிழகத்தில் அரசுப் பள்ளிகளின் கல்விச் சூழல் தொடர்ந்து சரிந்து வருகிறது. வேலைவாய்ப்பு இன்றி வெறும் படிப்புச் சான்றிதழ்கள் பெற்றவர்களாக மாணவர்கள் வெளியேறுகிறார்கள். இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசியுடன் போதைப்பொருள் விநியோகம் நடக்கிறது.

தமிழகத்தில் பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளன. தேசிய சராசரியை விட 2 மடங்கு அதிக குற்றங்கள் நடக்கின்றன. நமது சகோதரிகளும், மகள்களும் வீட்டை விட்டு வெளியேற அச்சப்படும் சூழல் நிலவுகிறது.

ஏழைகளுக்கு எதிராக கல்வி மற்றும் சமூக பாகுபாடு நிலவுகிறது. சமூக, பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டோர் மற்றும் பிறர் இடையே கற்றல் இடைவெளி அதிகரித்துள்ளது. சமூக மற்றும் பொருளாதார பாகுபாட்டுடன் வாழ்வதே அவர்களின் தலைவிதியாக மாறியுள்ளது.

பொதுப்பாதையை பயன்படுத்தும் பட்டியலின மக்கள் உடல் ரீதியாக தாக்கப்படுகிறார்கள். சுதந்திரம் பெற்றும் 75 ஆண்டுகள் ஆன பிறகும் பாகுபாடு நிலவுவது நாம் அவமானப்படக்கூடியது. வறுமை நிலை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் எதிர்காலம் மிகவும் சமரசம் செய்யப்பட்டுள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அதிகார வலிமை இல்லாத மக்களைதான் அரசு குறிவைக்கிறது சீமான் காட்டம்



சென்னை, ஆக. 16

வேளச்சேரி திருமண மண்டபத்தில் கைது செய்து அடைத்து வைக்கப்பட்டிருந்த தூய்மைப் பணியாளர்களை நா.த.க தலைமை ஒருங்கிணைப்பாளர்சீமான் நேரில் சந்தித்தார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், பேசியதாவது;

"கூலிக்கு போராடும் மக்களை பற்றி கவலைப்படாமல், கூலி படம் பார்க்கிறார் முதல்வர். மக்களை பற்றி சிந்திக்காதவர்களை தேர்வு செய்தது மக்கள் செய்த தவறு. ஆட்சியாளர்களை குறை சொல்ல நமக்கு எந்த தகுதியும் இல்லை. ஏனென்றால், அந்த ஆட்சியாளர்களை நிறுவியதே நாம் தான். சென்னை மாநகராட்சியை தூய்மைப்படுத்துவது தனியார் நிறுவனத்தின் வேலையா?

அதிகார வலிமை இல்லாத மக்களை தான் அரசு குறிவைக்கிறது. தூய்மை பணியாளர்களுக்கு பல்வேறு அறிவிப்புகள் கொடுக்கிறார்கள். தூய்மைப்பணி தனியாரிடம் செல்லும்போது அரசு ஏன் இதெல்லாம் வழங்குகிறது? அனைத்தும் கொடுக்கும் அரசாங்கம், நிரந்தர வேலையையும் கொடுத்து விடலாமே." இவ்வாறு அவர் பேசினார்.

# ரூ.31 கோடியில் பக்கிங்ஹாம் கால்வாய் புனரமைக்கும் பணி: துரைமுருகன் தொடங்கி வைத்தார்



சென்னை ஆக. 16

தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தமிழக துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் இன்று சென்னை, சேப்பாக்கத்தில் ரூ.31 கோடி மதிப்பீட்டில் மத்திய பக்கிங்ஹாம் கால்வாயில் சிவானந்தா சாலை லாக்நகர் முதல் ராஜா அண்ணாமலை புரம் வரை 7.315 கிலோ மீட்டர் நீளத்திற்கு புனரமைக்கும் பணியினை தொடங்கி வைத்தனர்.

மத்திய பக்கிங்காம் கால்வாய் சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மந்தைவெளி, நந்தனம், மயிலாப்பூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியிலிருந்து வடியும் வெள்ள நீர் கால்வாயாகவும், கூவம் நதி மற்றும் அடையாறு நதியின் மூலம் வெள்ள நீரை கடலுக்கு செலுத்துகிற வெள்ள நீர் கடத்தி கால்வாயாகவும் செயல்படுகிறது.

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மத்திய பக்கிங்காம் கால்வாயை தூர் வாரி புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார். அதனடிப்படையில் மத்திய பக்கிங்காம் கால்வாயின் நீர்தேக்க திறனை அதிகப்படுத்தும் வகையில் 1 மீட்டர் ஆழத்திற்கு அதிநவீன தூர்வாரும் இயந்திரங்களின் உதவியுடன் (*Amphibious Excavator cum Dredger*) தூர்வாரப்படுவதன் மூலம் கால்வாயின் வெள்ள நீர் கடத்தும் திறன் வினாடிக்கு 2,500 கன அடியாக உயரும். இதன் பயனாக சேப்பாக்கம், திருவல்லிக்கேணி, மந்தைவெளி, நந்தனம், மயிலாப்பூர் ஆகிய பகுதிகளில் இருந்து வெள்ள நீர் வடிந்து மத்திய பக்கிங்காம் கால்வாய் மூலம் விரைவில் கடலுக்கு சென்றடையும்.

மேலும் பக்கிங்காம் கால்வாயின் இரு கரைகளையும் பலப்படுத்தி, மரக்கன்றுகள் மற்றும் நடைபாதை அமைத்தல், நான்கு இடங்களில் சிறுவர் பூங்காக்கள் அமைப்பது ஆகிய அழகுப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) சிற்றரசு, நீர்வளத்துறை செயலாளர் ஜெயகாந்தன், மண்டலக் குழுத் தலைவர் மதன் மோகன் , நீர்வளத்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் கோபாலகிருஷ்ணண் உள்பட அரசு அலுவலர்கள், நீர்வளத்துறை பொறியாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிகள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் நிதி நிறுவனத்தில் ரூ.6 லட்சம் பணம் கொள்ளை: மர்ம நபர்களுக்கு போலீஸ் வலைவீச்சு

தூத்துக்குடி ஆக. 16

தூத்துக்குடி, எட்டயபுரம் ரோட்டில் உள்ள ஒரு தனியார் நிறுவனம் மூலமாக இருசக்கர வாகனங்களுக்கு கடன் உதவி அளித்து வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவில் அந்த நிறுவனத்தை பூட்டி விட்டு சென்றுள்ளனர். பின்னர் நேற்று காலையில் கடையை திறக்க வந்த போது, கடையின் ரோலிங் ஷட்டர் உடைக்கப்பட்டு கிடந்தது.

இதனால் அதிர்ச்சி அடைந்த கடை ஊழியர்கள் உள்ளே சென்று பார்த்தபோது அங்கிருந்த ரூ.6 லட்சம் பணம் திருடு போயிருந்தது. இதுகுறித்து நிறுவனத்தின் மேலாளர் மகேஷ் அளித்த புகாரின் பேரில் தூத்துக்குடி, மத்தியபாகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார். மேலும் சம்பவ இடத்தில் கைரேகைகளை பதிவு செய்ததோடு, இச்சம்பவத்தில் ஈடுபட்ட மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். இந்த கொள்ளை சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# திருச்செந்தூர் கோவிலில் ஜப்பான் பக்தர்கள் சாமி தரிசனம்

தூத்துக்குடி ஆக. 16



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குநாள்தோறும்ஏராளமான பக்தர்கள்வந்துதரிசனம்செய்துவிட்டு செல்கின்றனர். திருவிழா மற்றும் சில முக்கியதினங்களில்லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். தமிழகம் மட்டுமல்லாது, வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகளும் திருச்செந்தூர் கோவிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்கின்றனர்.

குறிப்பாக வெளிநாட்டு பக்தர்கள் கோவில் வழிமுறைப்படி சாமிதரிசனம் செய்துவிட்டு அங்குள்ள கட்டிடக்கலையையும் கண்டு ரசிக்கின்றனர். ஜப்பான் நாட்டை சேர்ந்த ஜப்பானிய சிவ ஆதீனம் பாலகும்ப குரு முனி தலைமையிலான சுமார் 80 பக்தர்கள் குழுவினர் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தனர். அவர்கள் பழனி, ராமேசுவரம் உள்ளிட்ட பல்வேறு கோவிலுக்கு சென்று ஆன்மிக பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக ஜப்பானிய பக்தர்கள் நேற்று திருச்செந்தூருக்கு வந்தனர்.

அவர்கள் முதலில் கடல் மற்றும் நாழிக்கிணறு தீர்த்தத்தில் புனித நீராடினர். பின்னர் கோவிலுக்குள் சென்று மூலவர், சண்முகர், வள்ளி, தெய்வானை, பெருமாள், சூரசம்ஹார மூர்த்தி உள்ளிட்ட அனைத்து சன்னதிகளுக்கும் சென்று வழிபாடு செய்தனர். இதில் ஆண்கள் வெள்ளை வேட்டி அணிந்தும், பெண்கள் மார்டன் உடையை தவிர்த்து நேர்த்தியாக உடையணிந்தும் சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் கோவிலுக்கு வெளியே வந்த ஜப்பான் நாட்டு முருக பக்தர்கள் அனைவரும் ஒன்று கூடி வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா... திருச்செந்தூர் முருகனுக்கு அரோகரா... ஞானவேல் முருகனுக்கு அரோகரா... கந்தவேல் முருகனுக்கு அரோகரா என தமிழில் பக்தி முழக்கமிட்டனர். இதனை அந்த வழியாக வந்த தமிழக பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பார்த்து சென்றனர்.

# ஓசூர் அருகே கார்கள் மீது லாரி கவிழ்ந்து கோர விபத்து

கிருஷ்ணகிரி, ஆக. 16

மராட்டிய மாநிலத்தில் இருந்து அந்தியூரை சேர்ந்த விவேகானந்தர் என்பவர் வெங்காய லோடை ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு பெங்களூரு சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்தார். இந்த நிலையில் ஓசூர் அருகே டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த லாரி சாலையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அப்போது இரண்டு கார்கள் லாரி அருகே சென்றுகொண்டிருந்த நிலையில், அதன் மீது லாரி கவிழ்ந்து கார்கள் அப்பளம் போல் நொறுங்கின.



காரில் இருந்தவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டனர். இந்த விபத்து காரணமாக அந்த சாலையில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. இதனிடையே தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். இதனை தொடர்ந்து விபத்தில் சிக்கிய வாகனங்கள் கிரேன் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன. இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தூய்மை பணியாளர்கள் போராட்டம்: முதல்அமைச்சர் எடுத்த நடவடிக்கைக்கு நன்றி ஈ.ஆர். ஈஸ்வரன் அறிக்கை

சென்னை, ஆக. 16

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தூய்மை பணியாளர்கள் பல கோரிக்கைகளைவலியுறுத்தி தொடர் போராட்டங்களை நடத்தி வந்ததை பல அரசியல் கட்சிகள் இதை அரசியலாக்க முயற்சித்த போதும் தமிழ்நாடு முதல் அமைச்சர் முறைப்படி அமைச்சரவையை கூட்டி தூய்மை பணியாளர்கள் குடும்பங்களுடைய நிலையை மேம்படுத்த நல்ல தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார். தூய்மை பணியாளர்களுடைய நலனில்தனக்குஅக்கறை இருக்கிறது என்பதை இன்றைய அறிவிப்புகள் மூலம் முதல்அமைச்சர் உணர்த்தியிருக்கிறார்.



காலை உணவு, குடியிருப்புகள், காப்பீடுகள், கூடுதல் இழப்பீடுகள் போன்ற பல்வேறு நல்ல விஷயங்களை தமிழக அமைச்சரவையால் ஒப்புதல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதல்அமைச்சரின் அறிவிப்புகள் மூலம் அவருடைய உணர்வுகளை புரிந்து பணியாளர்கள் போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும்.

மேலும் சில கோரிக்கைகளை பேச்சு வார்த்தை மூலமாக தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு தூய்மை பணியாளர்கள் பணிக்கு திரும்ப வேண்டும். தூய்மை பணியாளர்கள் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர தமிழ்நாடு முதல்அமைச்சர் எடுத்த நடவடிக்கைகளுக்கு நன்றி.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'தியாகத்தால் பெறப்பட்ட சுதந்திர இந்தியா, புதிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது' எஸ்.டி.பி.ஐ.

சென்னை, ஆக. 16

இந்தியாவின் 79வது சுதந்திர தின விழா நாளை கொண்டாடப்பட உள்ளது. இதனை முன்னிட்டு எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;



"ஆங்கிலேய ஏகாதிபத்திய அடிமைத்தளையை உடைத்தெறிந்து, 79வது சுதந்திர தினத்தை (ஆகஸ்ட் 15, 2025) கொண்டாடும் இந்திய மக்கள்அனைவருக்கும் மனமார்ந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளை உற்சாகத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமது முன்னோர்கள், தங்கள் விலைமதிப்பற்ற உயிர்களைதியாகம் செய்து, நமக்கும் வருங்கால சந்ததிகளுக்கும் சுதந்திர காற்றை சுவாசிக்கும் உரிமையை பெற்றுத்தந்தனர். அவர்களின் உன்னத தியாகத்தை நினைவுகூர்ந்து அவர்களை நாம் போற்றுவோம்.

சுதந்திரப் போராட்ட வீரர்களின் தன்னலமற்ற தியாகத்தால் பெறப்பட்ட சுதந்திர இந்தியா, இன்று புதிய அச்சுறுத்தல்களை எதிர் கொள்கிறது. கார்ப்பரேட் ஆதிக்கம், ஜனநாயகத்தின் சீர்குலைவு, தன்னாட்சி அமைப்புகளின் மீதான அரசின் கட்டுப்பாடு, மற்றும் அரசியலமைப்பு விழுமியங்களின் மதிப்பிறக்கம் ஆகியவை நமது தேசத்தின் அடித்தளத்தை அசைத்து வருகின்றன.

"எல்லோருக்கும் எல்லாம்" என்ற நமது முன்னோர்களின் கனவு, "சிலருக்கு மட்டுமே எல்லாம்" என்ற ஆபத்தை நோக்கி நகர்கிறது. இதனால், சுதந்திர இந்தியாவை வடிவமைத்த தலைவர்களின் கனவுகள் தகர்க்கப்படுகின்றன. நவீன ஊழல், மதவாதம், மற்றும் கார்ப்பரேட் முதலாளித்துவம் வலுப்பெற்று, மக்களாட்சியின் தத்துவங்கள் பலவீனமடைகின்றன. பணக்காரர்ஏழை இடைவெளி விரிவடைந்து, ஊழல் முறைகேடுகள் சட்டப்பூர்வமாக்கப்படுகின்றன. இவை நமது தேசத்தின் பன்முகத்தன்மையையும், நீதியையும்அச்சுறுத்துகின்றன.

ஆகவே, ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சமரசமின்றி போராடி, பல தியாகங்கள் செய்து நமது முன்னோர்கள் பெற்றுத்தந்த சுதந்திர தேசத்தை, அரசியலமைப்பின் விழுமியங்களை, மற்றும் தேசத்தின் பன்முகத்தன்மையை பாதுகாக்க ஒருங்கிணைந்து உறுதியேற்போம். நமது தேசத்தை நீதி, சமத்துவம், மற்றும் உண்மையான ஜனநாயகத்துடன் மீண்டும் உயர்த்துவோம். ஜெய் ஹிந்த்!"

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

16.8.2025

# SDPI கட்சியின் தாராபுரம் தொகுதி கொளத்துப்பாளையம் பேரூரில் 79 ஆம் ஆண்டு சுதந்திர தினம் கொடியேற்றும் நிகழ்ச்சி



SDPI கட்சியின் தாராபுரம் தொகுதி கொளத்துப்பாளையம் பேரூரில் 79 ஆம் ஆண்டு சுதந்திர தினம் கொடியேற்றும் நிகழ்ச்சி (15.8.25) இன்று காலை 6.30 மணியளவில் SDPI கட்சியின் D.காளிபாளையம் அலுவலகத்தில் நடைபெற்றது

தலைமை A.கலீல் ரஹ்மான் கொளத்துப்பாளையம் பேரூர் தலைவர் கொடியேற்றி வைத்தவர் A.ஷாஜகான் 3வது வார்டு கிளை பொருளாளர் வரவேற்புரை A.பரகத் அலி கொளத்துப்பாளையம் பேரூர் செயலாளர் மற்றும் கொளத்துப்பாளையம் பேரூர் நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள், கலந்து கொண்டனர்

இறுதியாக நன்றியுரை A.முகமது அலி கொளத்துப்பாளையம் பேரூர் பொருளாளர்


# இந்திய திருநாட்டின் 79 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டம்



மக்கள் ஜனநாயக முன்னேற்றக் கழகத்தின் தலைமை கழகத்தில் கழகத்தின்நிறுவனர்&அஹிம்சைத்தலைவர் செ.இப்ராஹிம் பாதுஷா IBRAHIEM BHATHUSHA அவர்கள் தலைமை தாங்கி மூவர்ண தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.. பெற்ற சுதந்திரத்தை பேணிக் காப்போம் கிடைத்த சுதந்திரத்தை மீட்டெடுப்போம் உள்ளிட்ட கருத்தையும் அன்றைக்கு வேலு நாச்சியார் தனி ஒரு பெண்ணாக போராடியது போல் இன்றைக்கு கழகத்தில் பல பெண் நிர்வாகிகளும் வீர மங்கைகளாக சட்ட விரோத கலெக்ஷன் ரவுடி குண்டர்களுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்துவதை வியந்து பாராட்டினார்.

வரக்கூடிய காலங்களில் இந்திய நாட்டின் சமத்துவத்திற்காகவும் சமூக நீதிக்காகவும் சகோதரத்துவத்திற்காகவும் அனைவரும் இணைந்து ஜனநாயக அறவழியில் கட்டமைத்து நாட்டை காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் எடுப்போம் என்று சூளுரைத்தார்..கழகத்தின்மாநில நிர்வாகிகள்திருப்பூர் மாநகர்மாவட்ட நிர்வாகிகள்வடக்கு மாவட்டம்தெற்கு மாவட்டம் உள்ளிட்ட அனைத்து ஒன்றியம் பகுதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கழகத்தின் மாநகர் மாவட்ட செயலாளர் செ.அபுதாஹிர் நன்றி உரை ஆற்றினார். S.அபுதாஹிர்.MJMK,கழக_செய்தி தொடர்பாளர் மாநகர்_மாவட்டகழகசெயலாளர் மக்கள்_ஜனநாயகம்_முன்னேற்ற கழகம் திருப்பூர்.

# சென்னை: கடந்த ஆண்டு மட்டும் 20 ஆயிரம் பேரை நாய்கள் கடித்துள்ளன: அதிர்ச்சி தகவல்



சென்னை, ஆக. 16

சென்னை ஐகோர்ட்டில், கோடம்பாக்கத்தைச் சேர்ந்த வக்கீல் ஆர்.எஸ்.தமிழ்வேந்தன் தாக்கல் செய்துள்ள பொது நல மனுவில், "ராட்வீலர் என்ற வெளிநாட்டு ரக நாய்கள் மிகவும் ஆக்ரோஷமானது. பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இந்த வகை நாய்களுக்கு வாய்மூடி அணியாமல் அதன் உரிமையாளர்கள் நடைபயிற்சிக்கு அழைத்து வரக்கூடாது என்று உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு ஐகோர்ட்டு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவத்சவா, நீதிபதி சுந்தர்மோகன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சென்னை பெருநகர மாநகராட்சி கால்நடை தலைமை அதிகாரி டாக்டர் கமால் உசேன் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் கூறியிருப்பதாவது:

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் மற்றும் விதிகளின்படி சென்னை மாநகரத்துக்குள் செல்லப்பிராணிகளை வளர்ப்போர் அந்த செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெற வேண்டும். இந்த உரிமத்தை ஆன்லைன் மூலமாக பெறலாம். செல்லப்பிராணிகளின் புகைப்படம், அதன் உரிமையாளர்கள் புகைப்படம், முகவரி உள்ளிட்டவைகளை பதிவேற்றம் செய்து, ரூ.50 கட்டணம் செலுத்தி உரிமம் பெற வேண்டும்.

உரிமம் வழங்கும்போது, செல்லப்பிராணிகளுக்கு கருத்தடை செய்ய வேண்டும். நோய்த்தடுப்பு ஊசிகளை போட வேண்டும். செல்லப்பிராணிகள் சாலையில் மலம் கழித்தால், அதை சுத்தம் செய்வது அதன் உரிமையாளர்களின் கடமை. பிறருக்கும், பொது சுகாதாரத்துக்கும் தொந்தரவு இல்லாமல் வளர்க்க வேண்டும் என்று நிபந்தனைகளும் விதிக்கப்படுகிறது. இதுவரை 11 ஆயிரத்து 630 செல்லப்பிராணிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டு உள்ளது.

நாய்க்கடி இல்லாத சென்னை என்ற இலக்கை அடைய கடந்த 9ந்தேதி முதல் தெருநாய்களுக்கு 'வெறிநாய் தடுப்பூசி முகாம்கள்' நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

இதையடுத்து நடந்த விசாரணையின்போது சென்னையில் எத்தனை நாய்க்கடி சம்பவங்கள் நடந்துள்ளன? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த மாநகராட்சி கால்நடைத்துறை அதிகாரி, கடந்த ஆண்டு மட்டும் சுமார் 20 ஆயிரம் பேரை நாய்கள் கடித்த சம்பவங்கள் நடந்துள்ளன என்றார்.

இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த நீதிபதிகள், "தெருநாய்களை பிடித்து கருத்தடை செய்து தடுப்பூசி போட்டு மீண்டும் அதே பகுதியில் விடுவதற்கு பதிலாக அவற்றை துன்புறுத்தாமல், தொந்தரவு செய்யாமல் உணவு உள்ளிட்ட வசதிகளுடன் தனியாக காப்பகம் அமைத்து பராமரிக்கலாம். 'நாய் கடி இல்லாமல், அதேநேரம் நாய்களை கொல்லாமல்' இதற்கு ஒரு தீர்வுகாண வேண்டும்" என்று கருத்து தெரிவித்தனர். பின்னர் தெருநாய் விவகாரம் தொடர்பான வழக்கை சுப்ரீம் கோர்ட்டு விசாரித்து வருவதால், நாய்க்கடி சம்பவங்களைத் தடுக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது? என்பது தொடர்பாக விரிவான அறிக்கை சென்னை மாநகராட்சி நிர்வாகம் தாக்கல் செய்யவேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் விசாரணையை 3 வாரத்துக்கு தள்ளி வைத்தனர்.

# இன்றைய ராசி பலன்கள் (16.8.2025)

மேஷம்: புதிய வாய்ப்புகள் கிடைக்கும் நாள். வேலைப்பளுஅதிகமாக இருந்தாலும் உழைப்புக்கு மதிப்பு கிடைக்கும்.

ரிஷபம்: நிதி தொடர்பான விஷயங்களில் கவனமாக இருக்கவும். குடும்பத்துடன் நல்ல நேரம் செலவிடுவீர்கள்.

மிதுனம்: புதிய நண்பர்கள் உருவாகலாம். பயணங்கள் பயனளிக்கும். உடல் நலத்தில் சிறு கவனம் தேவை.

கடகம்: முன்பு தள்ளிப் போன வேலைகள் இன்று நிறைவேறும். மன அமைதி அதிகரிக்கும்.

சிம்மம்: புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பெரியவர்களின் ஆதரவு அதிகம்.

கன்னி: செலவுகள் கூடும் நாள். உடல் சோர்வை தவிர்க்க ஓய்வு எடுக்கவும்.

துலாம்: விவாதங்களில் ஈடுபடாமல் இருங்கள். கலை, கல்வி தொடர்பான வெற்றி கிடைக்கும்.

விருச்சிகம்: நிதி வரவு அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும்.

தனுசு: மனதில் இருந்த கவலைகள் நீங்கும். வேலைப்பகுதியில் பாராட்டு கிடைக்கும்.

மகரம்: வணிகத்தில் லாபம். உறவினர் மூலம் உதவி கிடைக்கும்.

கும்பம்: புதிய திறமைகளை வெளிப்படுத்தும் நாள். அன்பு உறவில் மகிழ்ச்சி.

மீனம்: மன உற்சாகம் அதிகரிக்கும். ஆன்மீக சிந்தனைகள் உருவாகும்.




திருப்பூர் மாவட்டம் தாராபுரம் தலைவர் ராகுல் காந்தி தோலுரித்து காட்டிய தேர்தல் ஆணையத்தின் முறைகேடுகள் மற்றும் BJP யின் சூழ்ச்சிகளை பொது மக்கள் மத்தியில் கொண்டு செல்ல ஏதுவாக மெழுகுவர்த்தி ஏந்திய பேரணி திருப்பூர் தெற்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் வழக்கறிஞர் THENNARASU KITTUSAMY தலைமையில் தாராபுரத்தில் பேரணி நடைபெற்றது, இந்நிகழ்வில் முன்னாள் தாராபுரம் சட்டமன்ற உறுப்பினர் காளிமுத்து, நகர காங்கிரஸ் தலைவர் K.செந்தில் குமார் அசோக் குமார் சீனிவாசன் அக்கீம்அமீர் வட்டார நிர்வாகிகள்,மகளிர் அணி கலாராணி கானா பிரியா மாலதி சரோஜினி மாவட்ட இளைஞர் காங்கிரஸ் அருண்குமார் கவின் துரைசாமி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்

# சின்னத்திரை நடிகர் பாலாவின் "காந்தி கண்ணாடி" ரிலீஸ் தேதி அறிவிப்பு




சின்னத்திரையில், ரியாலிட்டி ஷோக்களில் அசத்தி வரும் கே.பி.ஒய் பாலா, திரைப்படங்களில் நடித்து வரும் நிலையில், தனது சம்பளத்தில் பாதியை மக்களுக்கு உதவி செய்து வருகிறார். அதேபோல் திரைப்படம் மற்றும் ஆல்பம் பாடல்களில் கவனம் செலுத்தி வரும் அவர், நடிப்பில் தீவிரம் காட்டி வருகிறார்.சின்னத்திரையில் விஜய் டிவியின் கலக்கப்போவது யாரு நிகழ்ச்சியின் மூலம் புகழ் பெற்றவர் கே.பி.ஒய்.பாலா. தனது காமெடியான ஒன்லைனர் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமான இவர், ஒரு சில திரைப்படங்களிலும் நடித்துள்ளார். சின்னத்திரை வெள்ளித்திரையில் நடித்து வந்தாலும், பாலா சமூக சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது பலரின் கவனத்தை ஈர்த்தது.

மலை கிராம மக்களுக்கு உதவும் வகையில் ஆம்புலன்ஸ் வாங்கி கொடுத்த பாலா, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிரபல நடிகருக்கு தன்னால் முடிந்த உதவியை செய்து வருகிறார். திரைப்படங்களில் நடிப்பது, நிகழ்ச்சிகள் தொகுத்து வழங்குவது என பிஸியாக இருக்கும் கே.பி.ஒய் பாலா ஒரு ஆல்பம் பாடலில் நடித்துள்ளார். பிரபல நடிகரான ராகவா லாரன்ஸ் போன்றோருடன் இணைந்து தனது தொண்டுகளை விரிவுப்படுத்தியுள்ளார்.

இயக்குநர் ஷெரீப்பின் புதியப் படத்தின் மூலம் பாலா கதாநாயகனாக அறிமுகமாகிறார். நடிகர் வைபவ்வின் 25வது படமாக 'ரணம் அறம் தவறேல்' எனும் திரைப்படத்தை ஷெரீப் இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் நடிகை நமிதா கிருஷ்ணமூர்த்தி முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்கிறார்.

படத்தின் இசையை மெர்வின் சாலமன் மற்றும் விவேக் மேற்கொள்கின்றனர். பாலாஜி கே ராஜா ஒளிப்பதிவை செய்கிறார். படத்தை ஆதிமூலம் கிரியேஷன்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. இவர்கள் தயாரிக்கும் முதல் திரைப்படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. படத்தின் டைட்டில் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. படத்திற்கு காந்தி கண்ணாடி என தலைப்பு வைத்துள்ளனர். தன்னுடைய உருவத்தை வைத்து கேலி செய்தவர்களின் முன்னிலையில் பாலா கதாநாயகனாக நிற்கும் காட்சி அந்த வீடியோவில் இடம் பெற்றுள்ளது.

இந்த நிலையில் 'காந்தி கண்ணாடி' படத்தின் தமிழ்நாட்டு திரையரங்க வெளியீட்டு உரிமையை பிரபல நிறுவனம் கைப்பற்றியுள்ளது. சின்னத்திரை நடிகர் பாலா நடித்துள்ள'காந்தி கண்ணாடி' படத்தின் வெளியீட்டு உரிமையை பிரபல நிறுவனமான சக்தி பிலிம்ஸ் பேக்டரி கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

'காந்தி கண்ணாடி' படம் வரும் செப்டம்பர் 5ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# "பரம் சுந்தரி" திரைப்படம் வெற்றி பெற நடிகை ஜான்வி கபூர் திருப்பதியில் சாமி தரிசனம்



மேடாக் பிலிம்ஸ் தினேஷ் விஜன் தயாரித்துள்ள ரொமான்ஸ் படமான பரம் சுந்தரியில் ஜான்வி கபூர் மற்றும் சித்தார்த் மல்ஹோத்ரா ஆகியோர் நடித்துள்ளனர். தஸ்வி புகழ் துஷார் ஜலேதா இந்த படத்தை இயக்கியுள்ளார். மல்ஹோத்ரா பரம் கேரக்டரிலும், ஜான்வி கபூர் சுந்தரி கேரக்டரிலும் நடித்துள்ளனர். திரைப்படம் வரும் 29ம் தேதி வெளியாகிறது.

படத்தின் பர்ஸ்ட் லுக் சில மாதங்களுக்கு முன் வெளியான நிலையில் படத்தின் டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது. அதில் வட இந்திய இளைஞனாக சித்தார்த் மல்ஹோத்ராவும் தென்னிந்திய பெண்ணாக ஜான்வி கபூர் காதலிக்கின்றனர். இவர்களது காதல் மற்றும் குடும்பங்களிடையே பிரச்சனை ஏற்படுகிறது . இதுப்போன்ற காட்சிகள் டிரெய்லரில் இடம் பெற்றுள்ளது. இதில் ஜான்வி கபூர் மலையாளத்திற்கு மோகன்லால், தமிழ்நாட்டுக்கு ரஜினிகாந்த் என்று கூறும் வசனம் கவனத்தை ஈர்த்துள்ளது.

இப்படம்சிரிப்பு,காதல்,பிரச்சனைமற்றும்எதிர்ப்பார்க்காதடிவிஸ்டுகளுடன்திரைக்கதைஅமைந்துள்ளதாகபடக்குழு அறிவித்துள்ளது. 'தேவரா' திரைப்படத்தில் ரசிகர்களை கவர்ந்திருந்த ஜான்வி கபூர் தற்பொழுது மீண்டும் தென்னிந்திய பெண்ணாக நடித்துள்ளதால் ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இந்நிலையில் திரைப்படம் வெற்றி பெற வேண்டி திருப்பதியில் சித்தார்த் மல்ஹோத்ரா மற்றும் ஜான்வி கபூர் சாமி தரிசனம் செய்தனர். இதன் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.


# "கூலி" படத்தை பாராட்டிய இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ்

நடிகர் ரஜினிகாந்த் மற்றும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'கூலி'. இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தப் படத்தில் அமீர் கான், சத்யராஜ், நாகர்ஜுனா, சவுபின் ஷாஹிர், ஸ்ருதிஹாசன், ரெபா மோனிகா ஜான் மற்றும் உபேந்திரா உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இந்நிலையில் உலகம் முழுவதும் 'கூலி' திரைப்படம் இன்று வெளியானது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா, கேரளாவில் ரசிகர்கள் திரையரங்கை அதிரவிட்டு வருகின்றனர். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இதனையடுத்து பல்வேறு திரை பிரபலங்கள் திரையரங்குகளில் கூலி படத்தை கண்டு மகிழ்ந்தனர்.

படத்தை பார்த்த இயக்குநர் கார்த்திக் சுப்பராஜ், "கூலி திரைப்படம் தலைவரின் தரிசனம்.... தலைவர் மாஸ், ஸ்வாக் அன் ஸ்டைல் பல தருணங்களில் அருமையாக இருந்தது.... ??? பிளாஷ்பேக் பகுதியில் வரும் அந்த சில நிமிடங்கள் ?? படத்தில் நடித்த அனைத்து கதாப்பாத்திரங்களுக்கும் வாழ்த்துகள்" என அவரது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஐ.பி.எல்.: விதிமுறையை மீறி பிரெவிசை ஒப்பந்தம் செய்த சிஎஸ்கே..? அஸ்வின் அதிர்ச்சி தகவல்



அண்மையில் முடிவடைந்த 18வது ஐ.பி.எல். தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி மோசமான செயல்பாட்டை வெளிப்படுத்தி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது. ஐ.பி.எல். வரலாற்றில் சென்னை அணி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடிப்பது இதுவே முதல் முறையாகும்.

இந்த சீசனுக்கான சிஎஸ்கே அணியில் இடம் பெற்றிருந்த வேகப்பந்து வீச்சாளர் குர்ஜப்னீத் சிங் விலகியதால், அவருக்கு பதிலாக மாற்று வீரராக தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த அதிரடி இளம் பேட்ஸ்மேன் 'பேபிஏபிடி' என்று அழைக்கப்படும் டிவால்ட் பிரெவிஸ் சேர்க்கப்பட்டார். குர்ஜப்னீத் சிங்கின் ஏலத் தொகையான ரூ.2.2 கோடிக்கு பிரெவிஸ் ஒப்பந்தம் செய்யப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. முன்னதாக நடைபெற்ற மெகா ஏலத்தில் அவரை யாரும் வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் கிடைத்த இந்த வாய்ப்பில் பிரெவிஸ், சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 6 ஆட்டங்களில் ஆடி 2 அரைசதம், 17 சிக்சர் உள்பட 225 ரன்கள் விளாசி கவனத்தை ஈர்த்தார். இதன் காரணமாக அடுத்த சீசனில் அவரை சென்னை அணி தக்க வைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் பிரெவிசை சிஎஸ்கே அணி கூடுதல் தொகைக்கு வாங்கியதாக ரவிச்சந்திரன் அஸ்வின் அதிர்ச்சியளிக்கும் தகவலை பகிர்ந்துள்ளார்.

இது தொடர்பாக அஸ்வின் பேசியது பின்வருமாறு: "டிவால்ட் பிரெவிஸ் குறித்து நான் ஒரு விஷயத்தை தெரிவிக்க விரும்புகிறேன். சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக பிரெவிஸ் கடந்த சீசனின் இரண்டாம் பாதியில் மிகவும் சிறப்பாக விளையாடினார். அதற்கு முன்னதாக சில அணிகள் அவரை வாங்க பேச்சுவார்த்தை நடத்தியதாக கேள்விப்பட்டேன். ஆனால் அவரது அடிப்படை விலைக்கு (ரூ.75 லட்சம்) மேல் கூடுதலாக பணம் கொடுக்க அந்த அணிகள் தயாராக இல்லாததால் அவர்களின் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தன.

பொதுவாக ஒரு மாற்று வீரரை அணியில் அவரது அடிப்படை விலையில் ஒப்பந்தம் செய்ய வேண்டி இருக்கும். ஆனால் சில நேரம் என்ன நடக்கிறது என்றால், சிலர் தங்களுக்கு கூடுதல் தொகை கொடுத்தால்தான் விளையாட வருவோம் என்று தெரிவிப்பார்கள். ஏனெனில் அடுத்த ஆண்டு அதிக தொகைக்கு விலைபோக வாய்ப்புள்ளது என்று அவர்களுக்கு தெரியும். இதுதான் பிரேவிசின் நிலைப்பாடாகவும் இருந்தது.

அவர் கேட்ட தொகையை கொடுக்க சென்னை அணி தயாராக இருந்ததால், அணியுடன் இணைந்தார். அவரது வருகையால் பேட்டிங் வரிசையும் வலுவடைந்தது. இப்போது சென்னை அணியின் கையில் கிரீடம் போன்ற ஒரு வீரர் கிடைத்துள்ளார். இந்த ஆண்டு நடைபெறும் மினி ஏலத்தில் சென்னை அணி கையில் ரூ.30 கோடியுடன் நுழைவார்கள். சிஎஸ்கேவின் அடுத்த சீசன் சிறப்பாகவும் சரியானதாகவும் தெரிகிறது" என்று கூறினார்.

ஐ.பி.எல். விதிப்படி காயமடைந்த வீரரின் ஏலத் தொகைக்கு மேல் மாற்று வீரருக்கு கொடுக்கக்கூடாது. ஒரு வேளை பிரெவிஸ் அதிக தொகைக்கு ஒப்பந்தம் ஆகியிருந்தால், அது சென்னை அணிக்கு சிக்கலை உருவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்.2026: அவர்தான் அதிக தொகைக்கு ஏலம் போவார்.. இந்திய முன்னாள் வீரர் கணிப்பு



ஐ.பி.எல். தொடரின் 18வது சீசன் இந்த வருடம் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி கோப்பையை கைப்பற்றியது.

இந்த தொடர் முடிவடைந்த சில வாரங்களிலேயே அடுத்த சீசனுக்கான பேச்சுகள் எழ ஆரம்பித்துவிட்டன. ஒவ்வொரு அணியின் நிர்வாகங்களும் தங்களது அணியை தற்போதே வலுப்படுத்த ஆரம்பித்துவிட்டன. வீரர்களை டிரேடிங் முறையில் மாற்றிக்கொள்ளவும் பேச்சுகள் நடப்பதாக தகவல்கள் வெளிவருகின்றன. இதனால் அடுத்த சீசன் மீதான எதிர்பார்ப்பு தற்போதே ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இதில் அடுத்த சீசனுக்கு முன்னதாக வீரர்களுக்கான மினி ஏலம் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு அணியில் இருந்து விடுவிக்கப்படும் வீரர்கள், கடந்த ஏலத்தில் பங்கேற்க முடியாத வீரர்கள், அறிமுக வீரர்கள் என பல தரப்பட்ட வீரர்கள் இந்த ஏலத்தில் தங்களின் பெயர்களை பதிவு செய்வார்கள். இதில் தங்களுக்கு தேவையான வீரர்களை அணிகள் ஏலத்தில் வாங்கிக்கொள்ளும்.

இந்நிலையில் ஐ.பி.எல்.2026 மினி ஏலத்தில் அதிக தொகைக்கு ஏலம் போகக்கூடிய வாய்ப்புள்ள வீரர் குறித்து இந்திய முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா தனது கணிப்பினை வெளிப்படுத்தி உள்ளார்.

இது தொடர்பாக பேசிய அவர் கூறுகையில், "கேமரூன் கிரீன், (ஆஸ்திரேலியா) ஏலத்தில் மிகவும் விலையுயர்ந்த வீரராக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். காயத்திலிருந்து திரும்பி வந்த பிறகு அவரது பேட்டிங் பார்ம் நம்பமுடியாத அளவுக்கு உள்ளது. அவர் இன்னும் பந்து வீசத் தயாராக இல்லை. ஆனால் ஒரு கட்டத்தில் பந்து வீசத் தொடங்குவார். தற்போது அவர் பந்து வீசாததால் டாப் ஆர்டரில் பேட்டிங் செய்கிறார்" என்று கூறினார்.

**DHINA KANI**
CANARA BANK
ACCOUNT: 120028528266
IFSC CODE: CNRB0001041

PRINTED BY KANIRAJA V. PUBLISHED BY KANIRAJA V. ON BEHALF OF NAMADHU DHINA KANI TAMIL DAILY AND PRINTED AT SEAMAN GRAPHICS NO. 7/253, KVN PURAM 2 2ND S T R E E T ,